உ

குகமயம்



திருக்கோணமலை

ஸ்ரீ முத்துக்குமார சுவாமி தேவஸ்தான

ஆதீனகர்த்தா

# சிவசேகரம் சிவானந்தம்

அவர்களின்

# நினைவு மலர்.

26-04-1994

கோணேஸ்வரி அச்சகம், திருக்கோணமலை. 49-94

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

குகமயம்



சந்தா புமெனக் கருடந் தையுநீ
சிந்தா குலமா னவைதீர்த் தெனையாள்
கந்தா கதிர்வே லவனே யுமையாள்
மைந்தா குமரா மறைநா யகனே.

# அமரர்

உயர்திரு.

# சிவசேகரம் சிவானந்தம்

அன்னையின் மடியில்
07-01-1911

இறைவனடியில்
27-03-1994

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விநாயகனே வெவ்வினையை வேரறுக்கவல்லான்
விநாயகனே வேட்கை தணிவிப்பான்
விநாயகனே விண்ணிற்கும் மண்ணிற்கும் நாதனுமாம்
தன்மையினல் கண்ணிற்பணிமின் கனிந்து.

## தேவாரம்

நிரைகழ லரவம் சிலம்பொலி யலம்பும்
நிமலர் நீறணி திருமேனி
வரைகெழு மகளோர் பாகமாப் புணர்ந்த
வடிவினர் கொடியணி விடையர்
கரைகெழு சந்துங் காரகிற் பிளவும்
அளப்பரும் கனமணி வரன்றிக்
குரைகட லோதம் நித்திலம் கொழிக்கும்
கோணமா மலை யமர்ந்தாரே.

## திருவாசகம்

உடையாள் உன்றன் நடுவிருக்கும்
உடையாள் நடுவுள் நீயிருத்தி
அடியேன் நடுவுள் இருவீரும்
இருப்பதனல் அடியேனுன்
அடியார் நடுவுள் இருக்கும் அருளைப்
புரியாய் பொன்னம் பலத்தெம்
முடியா முதலே யென்கருத்து
முடியும் வண்ணம் முன்னின்றே.

## திருவிசைப்பா

ஏகநா யகனை இமையவர்க் கரசை
என்னுயிர்க் கமுதினை எதிரில்
போக நாயகனைப் புயல்வணற் கருளிப்
பொன்னெடுஞ் சிவிகையா வூர்ந்த
மேகநா யகனை மிகுதிரு வீழி
மிழலைவிண் ணிழிசெழுங் கோயில்
யோகநா யகனை யன்றிமற் றொன்றும்
உண்டென உணர்கிலேன் யானே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருப்பல்லாண்டு

புரந்தரன் மாலயன் பூசலிட்
டோலமிட் டின்னம் புகலரிதாய்
இரந்திரந் தழைப்பஎன் னுயிராண்ட
கோவினுக் கென்செய வல்லமென்னும்
கரந்துங் கரவாத கற்பக
னாகிக் கரையில் கருணைக்கடல்
பரந்து நிரந்தும் வரம்பிலாப்
பாங்கற்கே பல்லாண்டு கூறுதுமே.

## புராணம்

வான்முகில் வழாது பெய்க மலிவளஞ் சுரக்க மன்னன்
கோன்முறை யரசு செய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை யறங்க ளோங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மை கொள் சைவ நீதி விளங்குக உலகமெல்லாம்.

## திருப்புகழ்

ஏறுமயி லேறி விளையாடு முகமொன்றே
ஈசருடன் ஞான மொழி பேசுமுகமொன்றே
கூறுமடி யார்கள் வினை தீர்க்கு முகமொன்றே
குன்றுருவ வேல்வாங்கி நின்ற முகமொன்றே
மாறுபடு சூரரை வதைத்த முகமொன்றே
வள்ளியை மணம்புணர வந்தமுகமொன்றே
ஆறுமுகமான பொருள் நீயருளல் வேண்டும்
ஆதி அருணாசல மமர்ந்த பெருமாளே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

முருகன் துணை

ஓம் சரவணபவாய நம:

# கந்தர் சஷ்டி கவசம்

## காப்பு

### நேரிசை வெண்பா

துதிப்போர்க்கு வல்வினைபோம், துன்பம்போம், நெஞ்சில்
பதிப்போர்க்குச் செல்வம் பலித்துக் - கதித்(து)ஓங்கும்
நிஷ்டையுங் கைகூடும், நிமலர் அருள் கந்தர்
சஷ்டி கவசந் தனை.

### குறள் வெண்பா

அமரர் இடர்தீர அமரம் புரிந்த
குமரன் அடி நெஞ்சே குறி.

## நூல்

### நிலைமண்டல ஆசிரியப்பா

சஷ்டியை நோக்கச் சரவண பவனார்
சிஷ்டருக்(கு) உதவும் செங்கதிர் வேலோன்,
பாதம் இரண்டில் பன்மணிச் சதங்கை
கீதம் பாடக் கிண்கிணி யாட,
மையல் நடஞ்செயும் மயில்வா கனனார்
கையில்வே லால்எனைக் காக்க என்(று) உவந்து,
வரவர வேலா யுதனார் வருக,
வருக வருக மயிலோன் வருக,
இந்திரன் முதலா எண்திசை போற்ற
மந்திர வடிவேல் வருக வருக,
வாசவன் மருகா வருக வருக,
நேசக் குறமகள் நினைவோன் வருக,
ஆறுமுகம் படைத்த ஐயா வருக,
நீ(று)இடும் வேலவன் நித்தம் வருக,
சிரகிரி வேலவன் சீக்கிரம் வருக,
சரஹண பவனார் சடுதியில் வருக,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ரஹண பவச ரரரர ரரர
ரிஹண பவச, ரிரிரிரி ரிரிரி
விணபவ சரஹண, வீரா நமோ நம
நிபவ சரஹண, நிறநிற நிறென
வசர ஹணப வருக வருக,
அசுரர் குடிகெடுத்த ஐயா வருக,
என்னை ஆளும் இளையோன் கையில்
பன்னிரண்(டு) ஆயுதம் பாசாங் குசமும்
பரந்த விழிகள் பன்னிரண்(டு) இலங்க,
விரைந்(து) எனைக் காக்க வேலோன் வருக
ஐயும் கிலியும் அடைவுடன் சௌவும்
உய்யொளி சௌவும், உயிரையுங் கிலியும்
கிலியுஞ் சௌவும், கிளரொளி யையும்
நிலைபெற்(று) என்முன் நித்தமும் ஒளிரும்
சண்முகன் றீயும் தனியொளி யொவ்வும்
குண்டலி யாஞ்சிவ குகன் தினம் வருக.
ஆறு முகமும் அணிமுடி ஆறும்,
நீ(று)இடு நெற்றியும், நீண்ட புருவமும்,
பன்னிரு கண்ணும் பவளச்செவ் வாயும்,
நன்னெறி நெற்றியில் நவமணிச் சுட்டியும்,
ஈராறு செவியில் இலகுகுண் டலமும்,
ஆ(று)இரு திண்புயத்(து) அழகிய மார்பில்
பல்பூ ஷணமும், பதக்கமும் தரித்து.
நன்மணி பூண்ட நவரத்தின மாலையும்,
முப்புரி நூலும், முத்(து)அணி மார்பும்,
செப்(பு) அழ(கு)உடைய திருவயி(று) உந்தியும்,
துவண்ட மருங்கில் சுடரொளிப் பட்டும்,
நவரத்தினம் பதித்த நற்சீ ராவும்,
இருதொடை அழகும், இணைமுழந் தாளும்,
திருவடி யதனில் சிலம்பொலி முழங்க
செககண செககண செககண செகண
மொகமொக மொகமொக மொகமொக மொகென
நகநக நகநக நகநக நகென
டிகுகுண டிகுடிகு டிகுகுண டிகுண
ரரரர ரரரர, ரரரர ரரர
ரிரிரிரி ரிரிரிரி, ரிரிரிரி ரிரிரி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டுடுடுடு டுடுடுடு, டுடுடுடு டுடுடு
டகுடகு டிகுடிகு, டங்கு டிங்குகு
விந்து விந்து, மயிலோன் விந்து
முந்து முந்து, முருகவேள் முந்து
என்தனை யாளும் ஏரகச் செல்வ!
மைந்தன் வேண்டும், வரமகிழ்ந்(து) உதவும்
லாலா லாலா லாலா வேசமும்
லீலா லீலா லீலா விநோதன் என்(று)
உன்திரு வடியை, உறுதியென்(று) எண்ணும்
என்தலை வைத்(து)உன் இணையடி காக்க!
என்உயிர்க்(கு) உயிராம் இறைவன் காக்க
பன்னிரு விழியால், பாலனைக் காக்க
அடியேன் வதனம், அழகுவேல் காக்க
பொடிபுனை நெற்றியைப் புனிதவேல் காக்க
கதிர்வேல் இரண்டும் கண்ணினைக் காக்க
விதிசெவி இரண்டும் வேலவர் காக்க
நாசிகள் இரண்டும் நல்வேல் காக்க
பேசிய வாய்தனைப் பெருவேல் காக்க
முப்பத்(து) இருபல் முனைவேல் காக்க
செப்பிய நாவைச் செவ்வேல் காக்க
கன்னம் இரண்டும் கதிர்வேல் காக்க
என்இளங் கழுத்தை இனியவேல் காக்க
மார்பை இரத்ந வடிவேல் காக்க
சேர்இள முலைமார் திருவேல் காக்க
வடிவேல் இருதோள் வளம்பெறக் காக்க
பிடரிகள் இரண்டும் பெருவேல் காக்க
அழகுடன் முதுகை அருள்வேல் காக்க
பழுபதி னாறும் பருவேல் காக்க
வெற்றிவேல் வயிற்றை விளங்கவே காக்க
சிற்றிடை அழகுறச் செவ்வேல் காக்க
நாண்ஆம் கயிற்றை நல்வேல் காக்க
ஆண்குறி இரண்டும் அயில்வேல் காக்க
பிட்டம் இரண்டும் பெருவேல் காக்க
வட்டக் குதத்தை வல்வேல் காக்க
பணைத்தொடை இரண்டும் பருவேல் காக்க
கணைக்கால் முழந்தாள் கதிர்வேல் காக்க

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஐவிரல் அடியிணை அருள்வேல் காக்க
கைகள் இரண்டும் கருணைவேல் காக்க
முன்கை இரண்டும் முரண்வேல் காக்க
பின்கை யிரண்டும் பின்னவள் இருக்க
நாவில் சரஸ்வதி நல்துணை யாக
நாபிக் கமலம், நல்வேல் காக்க
முப்பால் நாடியை, முனைவேல் காக்க
எப்பொழுதும் எனை எதிர்வேல் காக்க
அடியேன் வசனம் அசைவுள நேரம்
கடுகவே வந்து, கனகவேல் காக்க
வரும்பகல் தன்னில் வச்சிரவேல் காக்க
அரை இருள் தன்னில் அனையவேல் காக்க
ஏமத்தில், சாமத்தில், எதிர்வேல் காக்க
தாமதம் நீக்கிச் சதுர்வேல காக்க
காக்க காக்க கனகவேல் காக்க
நோக்க நோக்க நொடியில் நோக்க
தாக்க தாக்கத் தடையறத் தாக்க
பார்க்கப் பார்க்கப் பாவம் பொடிபட,
பில்லி சூனியம் பெரும்பகை அகல,
வல்ல பூதம் வலாஷ்டிகப் பேய்கள்,
அல்லல் படுத்தும் அடங்கா முனியும்,
பிள்ளைகள் தின்னும் புழக்கடை முனியும்,
கொள்ளிவாய்ப் பேய்களும், குறளைப் பேய்களும்,
பெண்களைத் தொடரும் பிரமராட் சதரும்.
அடியனைக் கண்டால் அலறிக் கலங்கிட,
இரிசிகாட் டேரி இத்துன்ப சேனையும்,
எல்லினும், இருட்டிலும், எதிர்ப்படும் அண்ணரும்,
கனபூசை கொள்ளும் காளியோ (டு) அனைவரும்,
விட்டாங் காரரும், மிகுபல பேய்களும்,
தண்டியக் காரரும், சண்டாளர்களும்
என் பெயர் சொலவும் இடிவிழுந்(து) ஓடிட,
ஆனை அடியினில் அரும்பா வைகளும்,
பூனை மயிரும், பிள்ளைகள் என்பும்,
நகமும் மயிரும், நீள்முடி மண்டையும்,
பாவைகள் உடனே, பலகல சத்துடன்
மனையில் புதைத்த வஞ்சனை தனையும்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒட்டியச் செருக்கும், ஒட்டியப் பாவையும்,
காசும் பணமும், காவுடன் சோறும்
ஓதும்அஞ் சனமும், ஒருவழிப் போக்கும்,
அடியனைக் கண்டால் அலைந்து குலைந்திட,
மாற்றான் வஞ்சகர் வந்து வணங்கிட
காலதூ தாளெனைக் கண்டால் கலங்கிட
அஞ்சி நடுங்கிட, அரண்டு புரண்டிட
வாய்விட் (டு) அலறி, மதிகெட்(டு) ஓட,
படியினில் முட்டப், பாசக் கயிற்றால்
கட்டுடன் அங்கப், கதறிடக் கட்டு;
கட்டி உருட்டு, கால்கை முறிய;
கட்டு கட்டு, கதறிடக் கட்டு,
முட்டு முட்டு, முழிகள் பிதுங்க,
செக்கு செக்குச், செதில்செதி லாக
சொக்கு சொக்குச், சூர்ப்பகைச் சொக்கு
குத்து குத்து, கூர்வடி வேலால்,
பற்று பற்று, பகலவன் தணல்எரி
தணல்எரி தணல்எரி, தணல்அது ஆக,
விடுவிடு வேலை, வெருண்டது ஓட
புலியும் நரியும், புன்நரி நாயும்
எலியும் கரடியும், இனித்தொடர்ந்(து) ஓடத்,
தேளும் பாம்பும் செய்யான் பூரான்,
கடிவிட விஷங்கள், கடித்(து,) உயர் அங்கம்
ஏறிய விஷங்கள், எளிதுடன் இறங்க,
ஒளிப்பும் சுளுக்கும் ஒருதலை நோயும்,
வாதம் சயித்தம் வலிப்புப் பித்தம்
சூலைசயம் குன்மம் சொக்குச் சிரங்கு
குடைச்சல் சிலந்தி குடல்விப் புரிதி
பக்கப் பிளவை படர்தொடை வாழை,
கடுவன், படுவன், கைத்தாள் சிலந்தி,
பற்குத்(து,) அரணை, பருவரை யாப்பும்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எல்லாப் பிணியும், எந்நனைக் கண்டால்
நில்லா(து) ஓட, நீஎனக்(கு) அருள்வாய்,
ஈரேழ் உலகமும், எனக்கு(உ)றவாக,
ஆணும் பெண்ணும் அனைவரும் எனக்கா,
மண்ணாள் அரசரும், மகிழ்ந்து(உ)றவாகவும்,
உன்னைத் துதிக்க, உன்திரு நாமம்
சரஹண பவனே சைலொளி பவனே!
திரிபுர பவனே! திகழொளி பவனே!
பரிபுர பவனே! பவம்ஒளி பவனே!
அரிதிரு மருகா! அமரா பதியைக்
காத்துத் தேவர்கள், கடுஞ்சிறை விடுத்தாய்!
கந்தா! குகனே! கதிர்வே லவனே!
கார்த்திகை மகிந்தா! கடம்பா! கடம்பு அணே,
இடும்பனை என்ற, இனியவேல் முருகா!
தணிகா சலனே! சங்கரன் புதல்வா!
கதிர்கா மத்(து)உறை, கதிர்வேல் முருகா!
பழநிப் பதிவாழ், பால குமரா!
ஆவினன் குடிவாழ், அழகிய வேலா!
செந்தின்மா மலையுறும், செங்கல்வ ராயா!
சமரா புரிவாழ், சண்முகத்(து) அரசே!
காரார் குழலாள், கலைமகள் நன்றாய்
என்நா இருக்க, யான்உனைப் பாட,
எனைத்தொடர்ந்(து) இருக்கும், எந்தை முருகனைப்
பாடினேன் ஆடினேன், பரவசம் ஆக
ஆடினேன் நாடினேன், ஆவினன் பூதியை
நேசமுடன், யான் நெற்றியில் அணியப்,
பாச வினைகள் பற்றது நீங்கி,
உன்பதம் பெறவே, உன்அருள் ஆக
அன்புடன் இரட்சி, அன்னமும் சொன்னமும்
மெத்தமெத் தாக, வேலா யுதனார்
சித்திபெற்(று,) அடியேன் சிறப்புடன் வாழ்க,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழ்க வாழ்க மயிலோன் வாழ்க
வாழ்க வாழ்க வடிவேல் வாழ்க
வாழ்க வாழ்க மலைக்குரு வாழ்க
வாழ்க வாழ்க மலைக்குற மகளுடன்,
வாழ்க வாழ்க வாரணத் துவசம்,
வாழ்க வாழ்க, என வறுமைகள் நீங்க,
எத்தனை குறைகள், எத்தனை பிழைகள்
எத்தனை அடியேன் செய்தே யிருப்பினும்,
பெற்றவன் நீகுரு, பொறுப்ப(து) உன்கடன்;
பெற்றவள் குறமகள், பெற்றவளாமே;
பிள்ளையென(று,) அன்பாய்ப் பிரியம் அளித்து,
மைந்தன்என் மீ(து,)உன் மனமகிழ்ந்து அருளித்,
தஞ்சம் என்(று) அடியார் தழைத்திட அருள்செய்
கந்தர் சஷ்டி கவசம் விரும்பிய
பாலன் தேவ ராயன் பகர்ந்ததைக்,
காலையில் மாலையில், கருத்துடன் நாளும்,
ஆசா ரத்துடன் அங்கம் துலக்கி,
நேச முடன்ஒரு நினைவது ஆகிக்,
கந்தர் சஷ்டி கவசம் இதனைச்
சிந்தை கலங்காது தியானிப் பவர்கள்,
ஒருநாள் முப்பத் தா(று)உருக் கொண்டு
ஓதியே செபித்து உகந்து நீறு அணிய,
அஷ்டதிக்கு உள்ளோர் அடங்கலும் வசமாய்த்,
திசைமன்னர் எண்மர், செயல(து) அருளுவர்,
மாற்றலர் எல்லாம் வந்து வணங்குவார்,
நவகோள் மகிழ்ந்து நன்மை அளித்திடும்,
நவமதன் எனவும் நல்எழில் பெறுவர்,
எந்த நாளும் ஈரெட்டாய் வாழ்வர்,
கந்தர்கை வேலாம் கவசத்(து) அடியை
வழியாய்க் காண மெய்யாய் விளங்கும்,
விழியால் காண வெருண்டிடும் பேய்கள்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொல்லா தவரைப் பொடிப்பொடி யாக்கும்,
நல்லோர் நினைவில் நடனம் புரியும்,
சர்வ சத்துரு சங்கா ரத்தடி
அறிந்(து) என(து) உள்ளம், அஷ்டலட் சுமிகளில்
வீரலட் சுமிக்கு விருந்(து) உணவு ஆகச்,
சூரபத் மாவைத் துணித்தகை யத்தால்,
இருபத் தெழுவர்க்(கு,) உவந்(து) அமுது அளித்த
குருபரன், பழநிக் குன்றினில் இருக்கும்
சின்னக் குழந்தை சேவடி போற்றி,
எனைத்தடுத்(து) ஆட்கொள, என்தன(து) உள்ளம்
மேவிய வடிவுறும் வேலவ போற்றி,
தேவர்கள் சேனா பதியே போற்றி,
குறமகள் மனமகிழ் கோவே போற்றி,
திறமிகு திவ்விய தேகா போற்றி,
இடும்பா யுதனே இடும்பா போற்றி,
கடம்பா போற்றி கந்தா போற்றி,
வெட்சி புனையும் வேளே போற்றி,
உயர்கிரி கனக சபைக்(கு) ஓர் அரசே!
மயில்நடம் இடுவோய் மலரடி சரணம்,
சரணம் சரணம் சரஹண பவஓம்,
சரணம் சரணம் சண்முகா சரணம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருக்கோணமலையைப் பிறப்பிடமாய்க் கொண்ட

# சிவசேகரம்-சிவானந்தம் 1911-01-07-1994-03-27

[அருள்மிகு ஸ்ரீ முத்துக்குமாரசுவாமி தேவஸ்தான ஆதீனகர்த்தா]

## அவர்களின் 31ம் நாள் நினைவஞ்சலி மலர்

## திதி வெண்பா

'சிவசேகரம் புதல்வன் சிவானந்தம் மண்ணுலகில்
பவமேற்று வாழ்ந்தே பவந்தீர்த்த - நவநாளைப்
பங்குனியின் உத்தரமாய் பார்க்கின்றோம் பூரணையில்,
இங்கிச் சிறிமுக வென்றெண்!'

## சரிதை கூறல்

அங்கிங்கெனாமல் எங்குங்கோயிலாய்
சங்காய் முழங்கித் தமிழாய்ப் பொழியும்
திருமலை மண்ணில் சிறப்புற வாழ்ந்த
பரமநாத பிள்ளை சிவசேகரம்
ஆசிரியர்களுக்கும் அருமை இரத்தின
சௌந்தரத்திற்கும் தவ மகனாகப்
பதினொரா மாண்டு தை- ஏழாம் நாள்
சிவானந்தமெனும் சிவனருட்செல்வன்
இத்திரு மண்ணின் எழிலாய்ப்பிறந்தான்!
அன்பில் தோய்ந்தான், அறத்தில் நனைந்தான்!
இன்பத் தமிழாய்- இசையாய் வளர்ந்தான்!
கலைகள் அறிந்தான், கல்வி தெரிந்தான்!
மலையா உள்ள மகனாய் ஆனான்!
ஆசும் இரிந்தா சிரியராய் ஆனான்!
நல் நவரெட்னம், அன்ன பூரணி
அம்மாள் என்போர் அருந்திருமகளாம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புவனேஸ்வரி யெனும் புதிய அம்மாளை
இல்லறத் துணையாய் ஏற்றுயர்ந்திட்டார்!
அமரர்கள் ஆன சச்சிதானந்தம்,
இரத்தினதுரை (யார்), (இன்) ஜெகதீசன்,
பரமேஸ்வரத்தோடு அமிர்தநாயகி,
காலமாய் ஆன சிவயோகநாயகி,
திருநிலைநாயகி என்னும் சகோதர-
சகோதரிகளையும்; வேலுப்பிள்ளை,
காலமாய் ஆன இரத்தினராஜவரோதயம்,
சிவராசாவொடு (சிர) புவனேஸ்வரி,
நந்தாவதி, நான் ஆம் பரமேஸ்வரி,
கௌரிமனோகரி என்னும் மைத்துன-
மைத்துனிகளையும்; (மா) சிவசேகரம்,
வித்தியானந்தன் மக்கள் தம்மையும்;
பிரேமினா, அனுசா மருமக்களையும்;
மணிமாறன், அர்ஜுன், அக்ஷதா என்னும்
பேரன் - பேர்த்தி மாரையும் கண்டும்-
அருள்மிகும் முத்துக் குமாரன் ஆலய
ஆதீனகர்த்தா ஆகி இருந்தே
ஆலயப்பணிகள் அமைதியாய் ஆற்றி
நற்பண்புடனும், நல்லன்புடனும்
எல்லோரோடும் இனிதாய்ப்பழகி
எண்பத்து மூன்றாண் டிப்புவி வாழ்ந்து-
மறுமையை விரும்பி மண்ணகம் விடுத்து
இவ்வாண்டு, பங்குனி, இருபத்து எழில்
பாசங் கொண்டோர் பலரும் புலம்ப
விண்ணுல கெனுமேல் வீடடைந்தாரே!
அங்கவர் ஆத்மா அடைகவே சாந்தி!

நன்றி

அன்றெமதமரர் அருங்கிரியை நாள்
வந்தோர், புரிந்தோர், வருந்தியோர்க்கெல்லாம்
இன்றைய அஞ்சலி இப்பெருநாளில்
நன்றிகள் உரைத்தோம் நாமெல்லோர்க்குமே!

---

அமரர்தம் குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருமலை

# முருகன் பதமலரில்

## சிவானந்தம்

திருஞானசம்பந்த மூர்த்தி நாயனாரால் தேவாரம் பாடப்பெற்றதும், அருணகிரிநாத சுவாமிகளால் திருப்புகழ் பாடப்பெற்றதும், மகாவலி கங்கை, கன்னியா, பாபநாச தீர்த்தம் ஆகியனவற்றால் சூழப்பெற்று திருக்கோணேசப் பெருமான் அருள்பாலித்தருளும் இத்திருக்கோணமலையின் கண்ணே மேழிக்கொடி பிடித்த உயர்குல வேளாண் மரபினில் வந்துதித்த பரமநாதப்பிள்ளை சிவசேகரமும் அவரது துணைவியார் இரத்தினசௌந்தரமும் கூடி இல்வாழ்க்கை இனிதே நடத்திவரும் வேளையில் எண்மரைப் புத்திரபேறுகப் பெற்றனர். அவர்கள் சச்சிதானந்தம், இரத்தினதுரை, ஜெகதீகன், சிவானந்தம், பரமேஸ்வரன், அமிர்தநாயகி, சிவயோகநாயகி திருநிலைநாயகி, இவர்களுள் அருட்பெரும் ஜோதியாக விளங்கிய **சிவானந்தம்** என்பார் தமது இளம் வயதில் அருங்கலை பல கற்று அரும்பணியாற்றி ஆசிரியர் தொழிலில் ஈடுபட்டு உழைத்து வந்தார். அவ்வேளையில் இவருக்கு திருமண வயதடைந்ததும் நவரெட்ணம் என்பாரும் அன்ன பூரணியும் பெற்று வளர்த்தெடுத்த புவனேஸ்வரி அம்மாளை திருக்கரம் பிடித்தார். அதன் பேற்றால் சிவசேகரம் வித்தியானந்தன் எனும் இரு பாலகர்களை பெற்றெடுத்தார்.

தனது சகோதரி சிவயோகநாயகியை தனது சொந்த மைத்துனர் நவரெத்தினம் இராஜவரோதயத்திற்கு திருமணம் நடத்தி வைத்தார். திரு. இரத்திணராஜவரோதயம் அவர்கள் தமது தந்தையார் ஆற்றிவந்த அரும்பெரும் தொண்டான திரு. முத்துக்குமார சுவாமி ஆலயத்தைப்

பொறுப்பேற்று நிர்வகித்து வந்தார். அன்னார் 27-8-1963 -ல் இறைவனடியெய்தியதும் தமது மைத்துனர் பராமரித்து வந்த திரு முத்துக்குமார சுவாமி ஆலயத்தை பொறுப்பேற்று முருகன் இறைபணியே தமது திருத் தொண்டென சிரமேற் கொண்டு ஆலயத்தை தனது பேராற்றலால் முப்பத்தொரு வருடங்கள் மெருகூட்டி வந்தார். நீதிமன்ற வீதியிலிருந்தும் அதன்பின் வித்தியாலயம் ஒழுங்கையில் தனது மருகர் ஸ்ரீ தரன் இல்லத்திலிருந்தும் தினமும் மூன்று வேளைப் பூஜாகாலங்களிலும் கால் நடையாகவே தவராது வந்து தரிசிப்பார். அன்னாருடைய காலத்தில் ஸ்ரீ முத்துக்குமார சுவாமி ஆலயத்தை பெரும் சீரும் சிறப்புமுடையதாக புதுப் பொலிவுடன் விளங்கவைத்தார். அவற்றை நாம் ஒவ்வொன் றுக குறிப்பட விரும்பவில்லை ஏனெனில் அவருடைய தொண்டு யாவரும் அறிந்ததே அன்னாருக்கு இறுதி ஆசை ஒன்று இருந்தது. அது தான் தேர்த்திருப்பணியாகும். அவற்றை நிறைவேற்றி தன் கண்கொள்ளாக் காட்சியை பார்த்து மகிழ விடாமல் முருகன் பங்குனி உத்தரமும், பூரணைத்திதியும் கொண்ட சுபநாளில் தன்பதம் சேர்த்துக் கொண்டான். முத்துக்குமரன் ஆலயத்தில் என்றும் சிவானந்தம் என்னும் பெயர் நிலைத்திருக்கும்.

75, கஸ்கிசன்வீதி,
திருக்கோணமலை.

சு. சண்முகரத்ன சர்மா
(எஸ். எஸ். சர்மா)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குருக்கள் ஐயா பிரலாபம்

''அரிது அரிது மானிடராகப் பிறத்தல் அரிது தானமும் தவமும் தான் செய்தல் அரிது தானமும் தவமும் தான் செய்தலாகில் வானவர் நாடு வழி திறந்திடுமே''

ஆம் உண்மையில் எமது மதிப்பிற்குரிய இறையடி சேர்ந்த முத்துக்குமாரசாமி கோயில் ''தர்மகர்த்தா'' சி. சிவானந்தம் ஐயா அவர்கள் 1963ம் ஆண்டு ஆலயத்தை பொறுப்பேற்று முக்கால பூசைகளையும் முறையாகச் செய்வித்து. ஆலய உட்பிரகாரத்தில் 'பிள்ளையார்' 'தண்டாயுதபாணி' 'நவக்கிரகங்களுக்கும் புதிதாகக் கோயில் கட்டி 1983ல் 'மகாகும்பாபிஷேகம்' செய்வித்தார். பின் ஆறுமுகசுவாமிக்கும் கோயில் கட்டிக் கும்பாபிஷேகம் செய்வித்தார். உள்மண்டபத்தை அழகுற அமைத்தார். ஆலய ராஜகோபுரத்திற்கு முன் ஓர் அழகான மண்டபம் அமைத்தார். ஆலய வெளிப்புறத்தை அழகுறச்செய்தார். பல ஆண்டுகளாக பாவிக்க முடியாமல் இருந்த ஆலய தீர்த்தக்கேணியை புதுப்பித்து ''சரவணப்பொய்கை'' என்னும் பெயர் சூட்டி முத்துக்குமரனை தீர்த்தம் ஆடச்செய்தார். அத்துடன் நில்லாமல் முத்துக்குமரனின் பழயை தேரை புதியசித்திரத்தேராக மாற்றவேண்டும் என்று அயரா முயற்சியுடன் பெருப்பாடு பட்டு சித்திரத்தேர் வேலைகளை ஆரம்பித்து தேர் விடுவதற்கான மண்டபம் (தேர்முட்டி) யையும் அமைத்து புதிய சித்திரத்தேர் முடியும் தருவாயில் எமது தலைவர் ஐயா அவர்கள் இவ்வாண்டு பங்குனி உத்தரத்தினத்தில் முத்துக்குமரன் தன் தேரில் அழைத்துக் கொண்டான.

இப்படியாக ஆலயத்தொண்டுகள் மட்டுமல்லாது கொடைவள்ளலாகவும்; பக்தி மானாகவும்; மக்கள் மனத்தில் இடம் பிடித்துள்ள ஐயா அவர்களின் 'ஆத்மா' சாந்தியடைய எல்லாம் வல்ல முத்துக்குமரனைப் பிரார்த்திக்கின்றேன்.

ஓம் சாந்தி, சாந்தி, சாந்தி;

பிரம்மஸ்ரீ
ரா. ராஜேஸ்வரக் குருக்கள்

11-04-1994

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமரர் சிவானந்தம்

திருக்கோணமலையில் உள்ள பிரபல்யமான ஆலயங்களில் ஒன்றாக விளங்குவது அருள்மிகு முத்துக்குமாரசாமி கோவில். மலையிலும் சுனையுடைய கடலுடன் சூழ்ந்த கோணேஸ்வரத்தில் கௌமார மார்க்கம் பேணப்பட்டு வரும் இந்த ஆலயத்தில் அரும்பணியாற்றிய பெருமை புகழுக்குரியவர் அமரர் சிவானந்தம் அவர்கள்.

ஆலய நிர்வாகம் இலகுவான காரியமல்ல அல்லும் பகலும் அதே சிந்தனையோடு செயல்படவேண்டிய தெய்வீகப்பணி. நடமாடும் தெய்வங்களின் நலன் கருதிப் படமாடும் பெருமானுக்குத் திருப்பணி செய்ய வாய்ப்புக்கிடைப்பதும் பெரும் பாக்கியமாகும்.

திருவாளர் மு. சண்முகம்பிள்ளை அவர்களின் தீர்க்க சிந்தனையில் தோன்றிய முத்துக்குமாரசாமி கோவில், பாரம்பரியமாக பரிபாலனம் செய்யப்பட்டு வந்து, அமரர் திரு. இ. இராஜவரோதயம் அவர்கள் விட்டுச்சென்ற திருப்பணிகளைத் தொடர்ந்தெடுத்த அமரர் திரு. சி. சிவானந்தம் அவர்களின் ஆயுட்காலத்தில் ஸ்ரீ முத்துக்குமார சுவாமி தேவஸ்தானம் என்ற உயர்வை அடைந்திருப்பதை யாவரும் அறிவர்.

காலத்துக்குக் காலம் ஆலயம் புனருத்தாரணம் செய்யப்பட்டு ஆகம சாஸ்திரத்துக்கமைவான புனித வழிபாட்டுத் தலமாக விளங்குவதற்கு அயராது உழைத்தவர் திரு. சிவானந்தம் அவர்கள் தீர்த்தக் கேணி, சரவணப் பொய்கையமைத்துப், ஆலயத்தில் புதிய விக்கிரகங்கள் பிரதிஷ்டை செய்யப்பெற்றதும் ஆலயச்சூழல் புனிதமாக்கப்பட்டதும், சித்திரத்தேர்த் திருப்பணி சிறப்பாக நிறைவேற்றியதும், அமரர் சிவானந்தம் அவர்களுடைய அயராத ஆத்மீக முயற்சியாகும். அன்னாரின் அரிய தொண்டுகளைப் பாராட்டி வாழ்த்துகின்றோம்

இன்றைய காலகட்டத்தில் பன்முகப்பட்ட வேற்று முகங்களை ஒருமுகமாக ஆற்றுப்படுத்தித் திருத்தொண்டுகள் செய்ய வேண்டியிருக்கின்றது. அத்தனைக்கும் முகங்கொடுத்துத் தேவஸ்தானத் தொண்டாற்றியவர் அமரர் சிவானந்தம் அன்னாரின் ஆத்மா சாந்தியடைவதாக. சிவத்தொண்டு செய்தவர் சிவன்முத்தராகின்றார்.

ஓம் சாந்தி.

ஸ்ரீ பத்திரகாளி அம்பாள் தேவஸ்தானம்
திருக்கோணமலை

வேதாகமமாமணி
சிவஸ்ரீ. சோ. ரவிச்சந்திரக் குருக்கள்
13-04-1994

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அஞ்சலி செய்வோர்

மனம் கசிந்து சிரந்தாழ்த்தி வணங்குவது அஞ்சலி ஆத்மா உடலைவிட்டுப் பிரிந்த துயரத்தை நினைவு கூருவது அனுதாப அஞ்சலி, ஆன்மா சுதந்திரமான புதிய புனர் வாழ்வைத் தொடங்கிய பிரிவை நினைவு கூரும் போது நிகழ்வது ஆனந்த அஞ்சலி நிரு. சிவானந்தம் ஐயா அவர்கள் இருவழி அஞ்சலிகளுக்கும் உரியவராகின்றார்.

சந்திரன் தன்னிடமுள்ள கறையிருளை நீக்கக்கருதாமல் உலகில் நிறைந்திருக்கும் நிறையிருளை நீக்கிக் குளிர்ச்சியான ஒளியைப் பரப்பி உலகத்தோருக்கு இதம் செய்வதுபோல சான்றோர்கள் தனக்கென வாழாது பிறர்க்குரியராகி வாழ்கின்றார்கள் இவர்கள் விழுமியோர் எனப்படுவர்.

''தன்குறை தீர்வுள்ளார் தளர்ந்து பிறர்க்குறூஉம்
வெங்குறை தீர்க்கிற்பார் விழுமியோர்''

என்று கூறுகின்றது நீதிசாஸ்திரம்.

எல்லாம் வல்ல இறைவனுக்காகவும், இறைவனை வழிபடும் மக்களுக்காகவும் தன்னைத் தியாகம் செய்து திருத்தொண்டாற்றுவதற்கு திரு. சி. சிவானந்தம் ஐயா அவர்கள் முன்னெடுத்துச் செயல்பட்ட விழுமியங்கள் பலவுள ஆலயப்புனருத்தாரணங்கள், கும்பாபிஷேகங்கள், விக்கிரகப் பிரதிஷ்டைகள், சித்திரத்தேர்த்திருப்பணி, சரவணப் பொய்கைப் புனரமைப்பு, ஆலயச் சுற்றுடல் பாதுகாப்பு, சிறப்பான நித்திய நைமித்தியப் பூசைகள். முதலியன அவர் மேற்கொண்ட திருப்பணிகளின் விழுமியங்களாகும். இதனால் அவர் விழுமியார் எனவைத்து எண்ணப்பட வேண்டியவராகின்றார்.

அருள்மிகு முத்துக்குமாரசுவாமி கோவில் அன்னாரின் முன்னோர்களின் உபயம். மக்களின் ஆத்மீக தாபத்தையும், தாகத்தையும் கருத்திற்கொண்டு சைவமக்களுக்கு, சிறப்பாக முருக பக்தர்களுக்கு வழங்கப்பட்ட உபயம. அதற்கு ஒரு சிறிதும் குறைவேற்படாமல் திரிகரண சுத்தியோடு தொண்டாற்றிய தேவஸ்தான முகாமையாளர் அமரர் திரு. சி. சிவானந்தம் ஐயாவுடைய ஆத்மா சாந்தியடைய அருள்மிகு முத்துக்குமார சுவாமியைப் பிரார்த்திக்கிறேம்.

தீர்க்க சிந்தனையும், உதாத்த குணமும், தெய்வீகப் பண்பும் நிறைந்த அமரர் சிவானந்தம் ஐயாவுடைய ஆத்மா சாந்தியடைவதாக.

15, வித்தியாலயம் ஒழுங்கை
திருக்கோணமலை

ஞானசிரோன்மணி
பண்டிதர். இ. வடிவேல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிவானந்தம் ஐயா

சிவானந்த மாஸ்ரர் என்றும் சிவானந்தம் ஐயா என்றும் மனேஜர் ஐயா என்றும் எல்லோராலும் அன்பாக அழைக்கப்படும் எங்கள் ஐயா முத்துக்குமார சுவாமி கோயில் தர்மகர்த்தாவாக முப்பத்திரண்டு ஆண்டுகள் பணியாற்றினார். ஐயாவின் மூச்சும் பேச்சும் செயலும் எல்லாமே முத்துக்குமாரர்தான்.

முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் திரு.ந.இ.இராஜவரோதயம் ஐயா சிவபதமடைந்தபின் இவரது கோயில் நிர்வாகத்தை சிவானந்தம் ஐயா ஏற்று இறுதிவரை பணியாற்றினார். இக்காலத்தில் கும்பாபிஷேகத்தை நடாத்தி கும்பாபிஷேக மலர் ஒன்றையும் சண்முகா சரணம் என்னும் வழிபாட்டு நூல் ஒன்றையும் வெளியிட்டு வழிபடுபவர்களிடையே ஆத்மீக விழிப்பை ஏற்படுத்தினார். இன்று முத்துக்குமார சுவாமி கோயில் திருக்கோணமலையில் முறையாகவும் சிறப்பாகவும் நடைபெறும் ஆலயங்களில் ஒன்றாகத் திகழ்கின்றது.

சிவானந்தம் ஐயா ஆங்கில ஆசிரியராகக் கடமைபுரிந்தார். ஆங்கிலம் கணிதம் படிப்பிப்பதில் திறமை மிக்கவர் அவரிடம் படித்த மாணவர்கள் பலர் உயர் நிலையில் உள்ளனர் அவருடைய மக்கள் இருவரும் "தந்தை மகற்காற்று உதவி அவைத்து முந்தியிருப்பச் செயல்" என்ற வள்ளுவர் வாக்குக்கமைய உயர் கல்வி பெற்று உயர் பதவியிலுள்ளனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏழைமக்கள் பலர் அவரை அடிக்கடி சந்தித்து உதவி பெற்றுக்கொள்வர். அவர் வலது கையால் கொடுப்பது இடது கைக்குத்தெரியாது.

கஷ்டப்பட்டவர்களைத் தேடிப்போய் உதவி செய்வார். தான் மற்றவர்களிடம் உதவி பெறவோ கடமைப்படவோ விரும்பார். தள்ளாத வயதிலும் தன்வேலைகள் அனைத்தையும் தானே செய்வார். ஓய்வுறக்கமின்றி எந்த நேரமும் வேலைசெய்து கொண்டேயிருப்பார் கடைசிக் காலத்தில் தேரைப்பார்க்க வேண்டும் என்ற ஆசையிருந்தது. தேர் வேலை முடிகிறது ஐயாவைக் கொண்டுபோய்க் காட்டுவோம் என்று கூறிய போது எனக்குத்தேரைக் காட்டமாட்டீர்கள் என்று தனக்கு நடக்கப்போவதை என்னிப் போலும் அவ்வாறு கூறினர்

ஐயாவுக்கு நாம் செய்யும் நன்றிக்கடன் முத்துக்குமார சுவாமி கோயிலைச் சிறப்பாக நடத்துவதுதான் ஐயா அவர்களின் ஆத்மா சாந்தியடைய எல்லோரும் பிரார்த்திப்போம்.

இன்பமே சூழ்க எல்லோரும் வாழ்க

முத்துக்குமாரசுவாமி கோயிலடி<br>
திருக்கோணமலை

போ. கந்தையா<br>
சாந்தி ஆசிரியர்



# திருப்பணி சேவைக்கு
# சிவானந்தம் ஐயா

பிறப்புக்கும் இறப்புக்கும் இடைப்பட்ட கால எல்லையைத் தான் வாழ்க்கை என்று கணித்தார்கள் பெரியோர்கள். இந்த வாழ்க்கை வட்டத்தில் மனிதன் உண்டு, உடுத்து, உறங்கி, விழித்து விடுவதால் மட்டும் அவனின் வாழ்க்கை பூரணத்துவம் அடைவதில்லை அவன் சமுதாயத்தோடு ஊடுருவி மக்களுக்கும் தான் பிறந்த மண்ணுக்கும் செய்யும் சேவையைக் கொண்டே ஒரு மனிதனின் வாழ்க்கை புனிதமடைகிறது.

இந்த வகையில் திருக்கோணமலையில் உயர் பணியாம் ஆசிரியர் சேவையை மேற்கொண்டு அச் சேவையின் மூலம் நல்ல தொரு மாணவர் சமுதாயத்தை உருவாக்கிய பெருமை சிவானந்தம் ஐயாவுக்கே உரியது. எளிமையும் அடக்கமும் கொண்ட இவர் எல்லோரும் பாராட்டும் அளவுக்கு மனம் திறந்து பழகக்கூடியவர்.

திருக்கோணமலையின் நாயகனாய் பாராளு மன்ற உறுப்பினராக திகழ்ந்த ந. இ. இராஜவரோதயம் அவர்களின் மறைவை அடுத்து அருள் மிகு முத்துக்குமார சுவாமி ஆலய பொறுப்பை ஏற்ற ஐயா அவர்கள் அவ்வாலய வளர்ச்சிக்காக அனு தினமும் சிந்தித்து அயராது உழைத்தார். அவரின் உழைப்பின் பயனாக நீண்ட கால இடைவெளிக்கு பின்பு நுணுக்கமான சித்திர வேலைப் பாடுகளோடு திருத்தி அமைக்கப்பட்ட முத்துக்குமரன் ஆலய கும்பாபிஷேகத்தை யாவரும் மெச்சத்தக்க விதத்தில் 1983ம் ஆண்டு நடாத்தி வைத்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அது மட்டும் அன்றி முன் மண்டபம், வாகனசாலை, தேர் தரிப்பிடம், சண்முகா தீர்த்தக் கேணி, புனரமைப்பு போன்ற திருப்பணிகளை துரிதமாக செய்வித்தார். முத்துக் குமரன் ஆலயத்துற்கு சித்திரத் தேர் ஓட வேண்டும் என்ற அவருடைய கனவு நனவாகும் தருவாயில் இறைவனடி சேர்ந்தது. எல்லோருக்கும் ஓர் பேரிழப்பு ஆகும் தில்லை நகர் கிராமோதய சபை உறுப்பினராக இருந்த அவர் எமது நடவடிக்கைகள் யாவற்றுக்கும் தனது பங்களிப்பை நல்கி வந்தார். முருகன் புகழ் பாடும் பல அரிய நூல்கள் ஆகிய கந்தசஸ்டிகவசம், சண்முகா சரணம், கும்பாபிஷேக மலர், போன்றவற்றை பண்டிதர் வடிவேல் ஐயா அவர்களின் துணையோடு ஆலய மண்டபத்தில் வெளியீடு செய்வித்தார். பல இந்திய இலங்கை சைவப் பெரியார்களின் சொற்பொலிவுகளை ஆலய மண்டபத்தில் நடாத்தி வைத்து பக்தர்களின் மனதை தெளிவுறச் செய்நார். அன்னாரின் வாழ்க்கை பிறர் பின் பற்ற கூடிய பொன்னான வாழ்க்கை சுக போகங்கள் இருந்தும் வசதி வாய்ப்புக்கள் இருந்தும் அவற்றின் வசப்படாது முருகன் திருப்பணியில் தன்னை ஐக்கியப் படுத்திக் கொண்ட அன்னாரின் உருவம் எம் மனத்திரையில் மறவா ஓவியமாக என்றும் நிலைபெற்றிருக்கும்.

செ. நவசோதிராசா
சமாதான நீதிவான்
கிராமோதய சபை தலைவர்
தில்லைநகர் பிரிவு
திருக்கோணமலை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




எமது தந்தை சிவசேகரம் சிவானந்தம் அவர்கள் சுகயீனமாக இருந்தபோது அவரைக் கண்டு ஆறுதல் கூறியவர்களுக்கும், பல்வேறு உதவிகள் செய்தவர்களுக்கும், அவர் முருகனடி சேர்ந்தபின் அவரின் மரணச்சடங்குகளில் கலந்து கொண்டவர்களுக்கும் அனுதாபச் செய்திகள், ஆறுதல் வார்த்தைகள் கூறியவர்களுக்குப், உதவிகள் பல புரிந்தவர்களுக்கும், அந்தியேட்டிக் கிரியைகளில் கலந்து கொண்டவர்களுக்கும் எமது மனம் நிறைந்த நன்றியைத் தெரிவிக்கின்றோம்.

**சிவசேகரம் வித்தியானந்தன்**
(மக்கள்)

**ஸ்ரீதரன் ராஜ்மோகன்**
(மருமக்கள்)

திருக்கோணமலை
26-01-1994

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org